# திராவிடத்தால் வாழ்கிறோம்

1234

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

164

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த பரமத்தி சண்முகம் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# நெசவாளர்களின் குரலாக ஒலித்த பரமத்தி சண்முகம்!

ஓவியம் : ரவி பேலட்



"கரூரில் எந்தப் பகுதி மக்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஒரு தேவை என்றால், கட்சி வித்தியாசம் பார்க்காமல் ஓடோடிச் சென்று உதவி செய்பவர், உடனடியாக அங்கு ஆக்கப் பணிகளைச் செய்கிறவர்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் போற்றிய உடன்பிறப்பு.

பேரறிஞர் அண்ணா அவர்களின் வழி ஈர்க்கப்பட்டு, திராவிட இயக்க அரசியலில் அடியெடுத்துவைத்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உடன்பிறப்பாக மாவட்டக் கழகத்தை வழிநடத்தியவர் பரமத்தி சண்முகம்.

"பரமத்தி சண்முகம் அவர்கள் கரூர் மாவட்ட தி.மு.க.வை அடிமட்டத்திலிருந்து வளர்த்தெடுத்த ஒரு மூத்த முன்னோடி, கட்சியின் அசைக்க முடியாத தூண்" என்று இன்றைய கழகத் தலைவர் ஸ்டாலின் புகழாரம் சூட்டிய உடன்பிறப்பு.

சண்முகம் அவர்களின் சொந்த ஊர், கரூர் மாநகரப் பகுதியில் உள்ள செங்குந்தபுரம், காந்தி நகர். பெற்றோர் அங்கமுத்து-அங்கமுத்து அம்மாள். 1937-ஆம் ஆண்டு பிறந்தவர். நெசவாளர் சமூகத்தைச் சேர்ந்த சண்முகம் அவர்கள், தன் வாழ்நாள் முழுவதும் கரூர் மாவட்ட அடித்தட்டு நெசவாளர் மற்றும் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். கழகத்தின் தொடக்க கால செயல்வீரராக கரூரிலும், கரூர் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் கட்சியை அடிமட்ட அளவில் வலுப்படுத்தியவர்களில் ஒருவராக இருந்தவர். அன்றைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட முன்னோடிகள் அன்பில் தர்மலிங்கம், குளித்தலை முத்துகிருஷ்ணன், வேடசந்தூர் முத்துச்சாமி உள்ளிட்டோருடன் இணைந்து செயல்பட்டவர்.

### மிசா கால கைதி

1964-ஆம் ஆண்டு மே மாதத்தில், இந்தி எதிர்ப்பு அறப்போரில், திருச்சியில் நடைபெற்ற அரசியல் சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் குளித்தலை முத்துக்கிருஷ்ணன், எஸ்.கே.சிங்காரம் உள்ளிட்ட தோழர்களுடன் இணைந்து, சட்டநகலை எரித்து, கைதாகிச் சிறை சென்றுள்ளார். 1976-ஆம் ஆண்டு மிசா நெருக்கடி கால கைதின்போது, திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் கைதானவர்கள் பட்டியலில் இடம்பெற்றவர் சண்முகம். மிசா சிறைவாசத்துக்குப் பின்னர், 1977-ஆம் ஆண்டில், இந்திரா காந்தி அவர்களுக்கு கருப்புக்கொடி காட்டும் போராட்டத்தில் கலந்துகொண்டு தாக்குதலைச் சந்தித்தவர். 1986 -ஆம் ஆண்டு, 'இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்', 'ஈழத் தமிழர் ஆதரவுப் பேரணி' எனப் பல போராட்டக் களங்களில் கரூர் மாவட்டக் கழகத்தினரை உறுதி குலையாமல் வழிநடத்திச் சென்றவர்.

சாதாரண தொண்டராகத் தன் அரசியல் வாழ்வைத் தொடங்கிய சண்முகம் அவர்கள், தனது தீவிர உழைப்பால் ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்திலும் பின்னர், பிரிக்கப்பட்ட கரூர் மாவட்டத்திலும் தி.மு.க. மாவட்டச் செயலாளர் என்ற உயர் பொறுப்பை அடைந்தார். 1995-ஆம் ஆண்டு கரூர் தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டபோது, ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டச் செயலாளராக இருந்தவர். மாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர், கரூர் மாவட்டச் செயலாளராகத் தொடர்ந்தார். 1997-ஆம் ஆண்டு நடைபெற்ற உட்கட்சித் தேர்தலிலும் அவர்தான் வெற்றிபெற்றார்.

> கரூர் மாவட்டக் கழகத்தின் தூணாகத் திகழ்ந்தாலும் பரமத்தி சண்முகம், தமிழ்நாட்டின் நெசவாளர்களின் குரலாக ஒலித்தவர்.

### தீவிரமாக உழைத்தவர்

நெருக்கடியான காலகட்டங்களிலும் தேர்தல் பிரச்சாரங்களிலும் கட்சியின் வெற்றிக்காகத் தீவிரமாக உழைத்தவர். 1993 காலகட்டத்தில் கழகத்தில் இருந்து வைகோ பிரிந்தபோது, கரூர் மாவட்டக் கழகத்தில் இருந்து பெரும்பாலானவர்கள் அவருடன் சென்றபோதிலும் கரூர் மாவட்டக் கழகப் பணிகள் அதே வீச்சுடனும் வேகத்துடனும் செயல்படுத்தியதில் கலைஞரின் நம்பிக்கையைப் பெற்றவராக இருந்தார்.

கரூரின் முக்கியத் தொழிலான கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பல கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் உருவாகவும், அவை தொய்வின்றிச் செயல்படவும் அரசு ரீதியாகப் பெரும் உதவிகளைக் கொண்டு சேர்த்தவர் சண்முகம். அதனால்தான் மாவட்டச் செயலாளர் பொறுப்பிலிருந்த அவரை, மாநில நெசவாளர் அணி அமைப்பாளராக்கினார் கலைஞர்.

2006-ஆம் ஆண்டில், மாநில நெசவாளர் அணித் தலைவராக இருந்தபோது, கரூர் மற்றும் தமிழ்நாட்டின் பிற மாவட்ட நெசவாளர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை அரசுக்கும் கட்சித் தலைமைக்கும் கொண்டுசென்று தீர்வு காண உதவினார். நெசவாளர்களின் வாழ்வாதாரத்துக்கும் முன்னேற்றத்திற்கும் பணியாற்றினார். தமிழ்நாடு கைத்தறிக் கூட்டுறவு விற்பனை நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் தலைவராகவும் சிறப்புடன் பணியாற்றியவர்.

2012-ஆம் ஆண்டில், கரூர் நகரில் கழகத்தின் மாவட்ட நிர்வாகிகளுடன் இணைந்து பெரியார், அண்ணா சிலைகள் அமைப்பதில் முக்கியப் பங்காற்றியவர். அந்தச் சிலைகளை இன்றைய கழகத் தலைவர் அவர்களை அழைத்துவந்து திறந்துவைத்தார். கரூர் மாவட்டத்தில், திராவிடர் கழக மேடைகளிலும் சண்முகம் அவர்களின் குரல், கொள்கை முழங்கியது எனக் குறிப்பிடுகின்றனர் கழகத்தினர்.

கழகத்தின் கொள்கை பரப்பு இணைச் செயலாளர், கொள்கை பரப்புச் செயலாளர் என அடுத்தடுத்த நிலைகளில் கழகத்தின் கொள்கைக் குரலாக ஒலித்து, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் தற்போதைய கழகத் தலைவர் ஆகிய இரு தலைமுறைகளுடனும் மிக நெருக்கமான மற்றும் நம்பிக்கையான அரசியல் நட்பைக் கொண்டிருந்தவர் சண்முகம். 2019-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், வயது மூப்பு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார். "அவரது மறைவு, கரூர் மாவட்டக் கழகத்துக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த நெசவாளர் சமூகத்திற்கும் கட்சிக்கும் பேரிழப்பு" என்று இரங்கல் தெரிவித்த கழகத் தலைவர் அவர்கள், அவரது இல்லத்துக்கு நேரில் சென்று, திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து அஞ்சலி செலுத்தினார். கழகத்தினர் ஒவ்வோர் ஆண்டும் திரளாகச் சென்று அவரது நினைவேந்தல் நிகழ்ச்சியினை நடத்தி, அவரது கொள்கைப் பணிகள் தொடருமென உறுதிமொழி ஏற்கின்றனர்.

கரூர் மாவட்டக் கழகத்தின் தூணாகத் திகழ்ந்தாலும் பரமத்தி சண்முகம், தமிழ்நாட்டின் நெசவாளர்களின் குரலாக ஒலித்தவர். அவரது நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்.

...துடிக்கும்

## கவிக்கோ அரங்கில், சின்னகுத்தூசி பிறந்தநாள் விழா!



மாணவப் பருவத்திலேயே, திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர், மூத்த பத்திரிகையாளர் சின்னகுத்தூசி. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்பதற்காக, ஆசிரியர் பணியில் இருந்து விலகியவர். பின்னர் பத்திரிகையாளர் ஆனார். 'முரசொலி', 'நாத்திகம்', 'அலை ஓசை', 'எதிரொலி' ஆகிய நாளிதழ்களிலும் 'உண்மை' 'ஜூனியர் விகடன்' போன்ற வார இதழ்களிலும், மற்றும் பல சிற்றிதழ்களிலும் அரசியல் விமர்சனக் கட்டுரைகளை எழுதியுள்ளார். தன் வாழ்நாளில் எண்ணற்ற பத்திரிகையாளர்களுக்கு உந்துசக்தியாகத் திகழ்ந்தவர். முத்தமிழறிஞர் கலைஞருடன் நெருக்கமான நட்பு பாராட்டியவர்.

அத்தகைய பெருமைக்குரிய சின்னகுத்தூசி அவர்கள் 2011-ஆம் ஆண்டு மறைந்த பிறகு, அவரது பெயரால் அறக்கட்டளை ஒன்று தொடங்கப்பட்டு, அவரது பிறந்தநாளையொட்டி எழுத்தாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சின்னகுத்தூசியின் 92-வது பிறந்தநாள் மற்றும் விருது வழங்கும் விழா இன்று (20.06.2026) மாலை 6 மணிக்கு சென்னை சி.ஐ.டி. காலனியில் உள்ள கவிக்கோ அரங்கில் நடைபெறுகிறது. திராவிட இயக்க ஆய்வாளரும் சின்னக்குத்தூசி நினைவு அறக்கட்டளையின் தலைவருமான க.திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்களுக்கு 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கி கௌரவிக்கப்பட உள்ளது. கவிக்கோ துரை வசந்தராசன், எழுத்தாளர் ஆழி செந்தில்நாதன், ஊடகவியலாளர் சுகிதா சாரங்கராஜ் ஆகியோர் 'சிறந்த எழுத்தாளர்' விருது பெறுகின்றனர்.

மூத்த பத்திரிகையாளர் நக்கீரன் கோபால் நோக்கவுரையாற்ற, கழகக் கல்வியாளர் அணியின் தலைவர், புலவர் செந்தலை கவுதமன் விருதுகளை வழங்கிச் சிறப்புரை ஆற்றவுள்ளார். மாலை 6 மணிக்கு நிகழ்ச்சி தொடங்குகிறது. வாய்ப்புள்ளோர் செல்க...

## ஃப்ளாஷ்பேக்



ஆர்.கே.எஸ்.எம். தம்பையா



### மறக்க முடியாத திருமணநாள்!

2011-ஆம் ஆண்டு மே மாதம் 13-ஆம் தேதி, எனது 20-வது திருமண நாளை முன்னிட்டு, என் குடும்பத்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். தலைவரின் வாழ்த்து கிடைத்த அந்த நாளை, என் வாழ்நாளில் மறக்க முடியாத நாளாகக் கருதுகிறேன்.

**- ஆர்.கே.எஸ்.எம்.தம்பையா,**
**45-வது வட்டத் துணைச் செயலாளர்,**
**பெரம்பூர் தெற்குப் பகுதி, சென்னை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நல்வருக

### கண்ணியம் கொண்ட அண்ணா!

1962-ஆம் ஆண்டில், சென்னை பூந்தமல்லியில் கழகத்தின் பொதுக்கூட்டம். மாங்காடு கிராமத்தில் இருந்து புறப்பட்ட ஊர்வலத்தில், மிகப் பிரம்மாண்டமாக அலங்கரிக்கப்பட்ட தேரில், பேரறிஞர் அண்ணாவை அழைத்துவந்தனர் கழகத்தினர். மக்கள் வெள்ளமெனத் திரண்டு வந்த ஊர்வலப் பாதையில், எதிர்பாராத விதமாக அன்றைய விவசாயத் துறை அமைச்சராக இருந்த எம்.பக்தவத்சலம் சிக்கிக்கொண்டார். அதைப் பார்த்ததும் தேரிலிருந்து இறங்கிய அண்ணா, அவரை அங்கிருந்து வழியனுப்ப வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அனுப்பி வைத்துவிட்டு, பிறகு அலங்காரத் தேரில் ஏறி பேரணி வந்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900